# சுபீட்சம்

இதழ் -09 SOND ஆடி 2005


## சுனாமியின் பின்னரான அபிவிருத்தி நடவடிக்கைகள்.

சுனாமிப் பேரலையின் தாக்கம் ஏற்பட்டு ஆறு மாதங்கள் கடந்துவிட்ட நிலையில் உங்களை நாம் சந்திக்கின்றோம். சுனாமியானது நாம் எல்லோரையும் மிகப் பெரிய தாக்கத்துக்குள்ளாக்கி விட்டது எம்முடைய சமூக, பொருளாதார, சூழல் கட்டுமானங்கள் அனைத்துமே சிதைந்து போயிருக்கின்றது. கடந்த 20 வருடங்களுக்கு மேலாக வடகிழக்கில் யுத்தம் ஏற்படுத்திய சமூக, பொருளாதார, சீரழிவுகளில் இருந்து மீழ்வதற்கான முயற்சிகளை எடுக்கும் இந்தக் கால கட்டத்தில், இன்னொரு பேரழிவு எம்மைத் தாக்கியுள்ளது. இது எம்மை மிக ஆழமாகவே பாதித்துள்ளது. எனினும் இது எம்மால் மீழ முடியாத ஒரு பேரழிவல்ல.

இந்தப் பாதிப்புக்களிலிருந்து மீழ வேண்டுமாயின் இவற்றுக்கான புனர் நிர்மாண நடவடிக்கைகளைச் சரியாகத், திட்டமிட்டுச் செய்ய வேண்டும். ஆனால் நடப்பதென்ன? இங்கு இதுதொடர்பான திட்டமிடல் மிகவும் அரிதாகவே காணப்படுகின்றன.

சுனாமி ஏற்படுத்திய தாக்கத்தை விட சுனாமி புனர் நிர்மாண நடவடிக்களுக்காக முன்வந்த நிறுவனங்கள் ஏற்படுத்திய சமூகத் தாக்கம்தான் பாரியதாகக் காணப் படுகின்றது. அவர்கள் ஒவ்வொருவரும் அவசரப்பட்டு எதையாவது செய்து முடிக்க வேண்டும் என்ற ஆர்வத்துடன் செயற்பட்டமை இந்த விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது.

அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபடும் நிறுவனங்களின் செயற்பாடுகளிற்கு ஒருங்கிணைப்பு ஒன்று இல்லாது தத்தமது சக்திக்கும், எண்ணத்துக்கும் அமைய இவர்கள் செயல்பட்டமை இத்தகைய விளைவு ஒன்று எம்மை எதிர்நோக்குவதற்குக் காரணமாக அமைந்தது. இதனால் கோடிக்கணக்கான ரூபாய்கள் பெறுமதியான வளங்கள் வீணாக விரயம் செய்யப்பபட்டுள்ளதுடன் சமூகத்தில் கட்டமைப்பொன்றை உருவாக்கியிருந்த உள்ளூர் நிறுவனங்களின் ஒழுங்குகளும், கட்டமைப்புகளும் குலைந்து போவதற்கும் இச் செயற்பாடுகள் வழிய மைத்துள்ளன.

நீண்டகாலக் கண்ணோட்டத்தில் திட்டமிடாமல் செய்யப்பட்ட நடவடிக்கைகளின் விளைவாக எமது பிரதேசத்தின் எதிர்கால சமூக, பொருளாதார, சூழல் எப்படி இருக்கும் என்பது கேள்விக்குறியாக உள்ளது.

இவற்றையெல்லாம் விரிவாக நாம் புள்ளி விபரப் பக்கங்களில் ஆராய்திருப்பினும் இவை எம் மனதைப் பாதிக்கின்ற பாரிய விடயங்களாகும்.

எம்முள் இருக்கின்ற பாரிய பணியாக இப் புனர்வாழ்வு நடவடிக்கைகளிற்கு ஒருங்கிணைப்பு ஒன்றை உருவாக்குவது அவசியமாக இருக்கின்றது. அரசாங்கம், அரச சார்பற்ற நிறுவனங்கள், உள்ளூர், மற்றும் மக்கள் அமைப்புக்களும் இணைந்த ஒரு நீண்டகால அடிப்படையிலான திட்டமிடலை, யார்? எதை? எப்போ? எங்கே? எவ்வாறு? செய்வது என்பதைக் கருத்தில் கொண்டு திட்டமிடல் வேண்டும்.

இவ்வாறு ஒருங்கிணைக்கப்பட்ட குழு ஒன்றின் மூலம் அபிவிருத்தித் திட்டங்கள் செயற்படுத்தப்படுமாயின் மாத்திரமே எமது வளங்கள் விரயமாவது தடுக்கப் படுவதுடன். எமது பாதிக்கப்பட்ட மக்களின் தேவைகளும் சரியான முறையில் பூர்த்தியாக்கப்படும்.

பொலித்தீன்
பாவனையைக்
குறைப்போம் !
பாவிக்கும் பொலித்தீனை
மீண்டும் பாவிப்போம் ! !

"இடைவிடாது, தடைப்படாது துணிவுடன் செயற்பட்டால், விதியும் எம்மைவிட்டு விலகிவிடும்"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுனாமித் தாக்கமும் நடைமுறைச் சிக்கல்களும்

சுனாமிப் பேரலையின் விளைவாக இலங்கைத்தீவு சின்னா பின்னமாக சிதைந்து போயுள்ளது. குறிப்பாக வடகிழக்கு வாழ் தமிழ் மக்களின் வாழ்கை கடந்த யுத்த காலங்களை விட மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது இயற்கையின் சீற்றம் எல்லோரையும் எல்லா மட்டங்களிலும் நிலை குலையச் செய்துள்ளது.

இயற்கை அனர்த்தம் ஒன்று இவ்வாறு ஏற்படும் என்பதை எவரும் அறியாமையினால் எதிர்பார்த்திராத நிலையில் ஏற்பட்ட அனர்த்தத்தின் விளைவாக அதனைச் சமாளிக்க முடியாத அரசாங்கமும், அரச சார்பற்ற நிறுவனங்களும், மக்களும் நிலை குலைந்து போயுள்ளார்கள்.

இது இயற்கையின் சீற்றம். தனி நபர் ஒருவர், ஒருவர் மீதோ அல்லது ஒரு குழு மீதோ பொறுப்புக் கூற முடியாது. இந்நிலைமைக்கு நாம் அனைவருமே பொறுப்பேற்க வேண்டும். மக்கள் இத்தகைய அவல நிலைக்குத் தள்ளப்பட்ட நிலையிலும் மனித உணர்வுகளே இல்லாது மோசமாக நடந்து கொள்ளும் நபர்களைப் பற்றி நாம் சிந்திக்கவேண்டிய நிலையிலுள்ளோம்.

இயற்கையின் சீற்றமோ, இறைவனின் தண்டனையோ எதுவாயினும் இந்த நிலையில் அனைவரும் மிகவும் பொறுப்புணர்வுடன் நடந்து கொள்ள வேண்டும். ஆனால் நடந்ததெல்லாம் என்ன? நடந்தவற்றை நினைக்கையில் மிகவும் வெட்கக் கேடாகவும், அருவருக்கத் தக்கவொன்றாகவும் இருக்கிறது.

பெறுமதியற்ற மனித உயிர்கள் மரணித்துக் கொண்டிருந்த போது மரணித்த உடல்களில் இருந்த ஆபரணங்கள் அபகரிக்கப்பட்டிருக்கின்றன. வீடுகளில் இருந்த தளபாடங்கள், வீட்டுப் பொருட்கள் களவாடப்பட்டுள்ளன. மக்களின் துயர் துடைப்பிற்கென வந்த பொருட்கள் சூறையாடப்பட்டு பொறுப்பு மிகுந்தவர்களே மக்களின் வயிற்றில் அடித்துக் கொண்டு மக்களுக்கென வழங்கப்பட்ட நிதியையும் பொருட்களையும் ஏப்பம் விட்டுள்ளார்கள்.

இவற்றினை உற்று நோக்குகின்ற போது எமது சமூகத்தில் ஒரு கட்டுப்பாடு இல்லை, பொறுப்புணர்வுடன் நடந்து கொள்கின்ற ஸ்தாபனங்கள் இல்லை, என்பதையும் இதைத் தட்டிக் கேட்க எவரும் இங்கில்லை என்பதையும் எடுத்துக் காட்டுகிறது. சுனாமி எமக்குப் பல பாடங்களைக் கற்றுத் தந்திருக்கிறது. முக்கிமாக எமது சமூகம் ஒழுங்கு படுத்தப்பட்ட நிலையோடு இல்லை என்பதை மிகத் துல்லியமாகக் காட்டியிருக்கிறது. அப்படி இருந்திருந்தால் இப்படியான செயற்பாடுகள் எதுவும் இங்கு நடைபெற்றிருக்க வாய்ப்பில்லை.

இத்தகைய இடர் ஒன்று நேருகின்ற பொழுது முதற் பொறுப்பு அரசாங்கத்திற்குரியது. அரசானது தன்னுடைய கட்டமைப்பினூடாக உடனடியாகச் செய்ய வேண்டிய பணிகள் பற்றி நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். ஆனால் மாவட்ட மட்டங்களில் கச்சேரிகளில் நடைபெற்ற கூட்டங்களில் சுனாமியின் பின்னர் நடந்த சம்பவங்களைக் கலந்துரையாடினார்களே தவிர தீர்க்கமான முடிவுகள் எடுக்கப்படவோ, எந்தப் பகுதியில் எந்த நிறுவனம் எவ்வாறான வேலைகளைச் செய்ய வேண்டும் என்றோ எந்த விதமான தீர்மானங்களும் எடுக்கப்படவே இல்லை. இதன் விளைவாகப் புனர்வாழ்வுக்கான கோடிக்கணக்கான பணம் விரயமாகிப் போயுள்ளது.

பொருட்களைப் பெற்றவர்கள் மேலும், மேலும் பெற்ற வண்ணம் இருந்தார்கள் நலிவுற்றோர், எதிர்த்துப் பேசத் தைரியமற்றோர் எதையுமே பெறாத நிலையில் ஒதுங்கி இருந்தார்கள். வாய் வல்லமையுள்ளோர் இப் பாதிப்பின் பின்னரான காலப்பகுதியில் நன்றாக வாழ்கிறார்கள். ஒதுங்கியிருந்தவர்கள் இப்போதும் ஒதுங்கியே இருக்கின்றனர்.

இதற்குக் காரணம், எம்மிடையே இருக்கின்ற அரசாங்க அதிகாரிகள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பொறுப்பதிகாரிகள், மற்றும் சமூகத் தலைவர்கள் என்றுதான் கூற வேண்டும். இத்தகைய பொறுப்பை நாம் அனைவரும் ஏற்றே ஆக வேண்டும். அதன் மூலமாகத்தான் இப்படிப்பட்ட இடர்பாடுகளின் போதும் நாங்கள் நேர்மையாகச் சிந்தித்து சிறப்பாக எதையேனும் செய்ய முயற்சிக்கலாம்.

மாவட்ட மட்டங்களிலுள்ள அரச பணிமனைகள் கொழும்பிலிருந்து உத்தரவுகள் வர வேண்டும் என்று எதிர்பார்த்து இருந்தார்களே தவிர தற்துணிவு அதிகாரத்தின் படி தாம் பல காரியங்களைச் செய்திருக்க முடியும் என்பதை சிந்திக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் இது வரை காலமும் பணியாற்றாத ஏராளமான அரச சார்பற்ற நிறுவனங்கள் இங்கு பணியாற்ற வந்த போதும் "நீங்கள் பணியாற்றலாம்" என்று அனுமதி வழங்கப்பட்டாலும் எந்தப் பிரதேசத்தில் என்ன வேலையைச் செய்யலாம் என்ற ஒருங்கிணைப்பு ஒன்று நடைபெறவில்லை. இவ் அனர்த்தத்தின் பின் இலங்கைக்கு வருகை தந்த சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் ஏராளமான நிதியைக் கொண்டு வந்து வழி தெரியாமல் எதை எதையோ செய்து கொடுத்தார்கள், வழங்கினார்கள்.

இலங்கையில் கடந்த காலமாகப் பணியாற்றிக் கொண்டு இருக்கின்ற நிறுவனங்களும் கூட இவ் அனர்த்தத்தின் விளைவாகப் பெற்ற பெருமளவு நிதியை செலவிடத் தெரியாது பிரயோசனமற்ற முறையில் வாரி இறைத்துக் கொண்டு இருந்தார்கள். இதன் விளைவாக உள்ளூர் மக்களின் வாழ்கை நிலை மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டு இருந்தது ரூ 300 இற்கு பிடித்த கூலியாட்களை ரூ800 இற்குக் கூட பிடிக்க முடியாத நிலை உருவாகியுள்ளது பொருட்களின் விலையும் மிக மோசமாக ஏறியிருந்தது. தாம் கொண்டு வந்த பொருட்களுக்கு கணக்கு காட்ட வேண்டும் என்ற அவசரம், வேகமும்தான் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களிடம் காணப்பட்டது. தாம் என்ன செய்கின்றோம் இதன் விளைவாக உள்ளூர் நிறுவனங்கள் மக்கள் எவ்வாறு பாதிக்கப்பட போகின்றார்கள் என்று சற்றும் சிந்திக்காமலும், இவற்றைச் சுட்டிக் காட்டியும், அவற்றை சிந்திக்காது ஏனோ தானோ என்ற போக்கில் இந் நிறுவனங்கள் நடந்து கொண்டன.

சுனாமிக்கு முன்னர் இந்த நிறுவனங்கள் சிக்கனம் பற்றியும் நற் செயற்பாடுகள் பற்றியும் ஒழுங்கமைப்பு பற்றியும் உள்ளூர் நிறுவனங்களுக்கு போதித்தன ஆனால் இவை அனைத்தும் எமக்கு போதித்த நிறுவனங்களினாலேயே நிராகரிக்கப்பட்டு தூக்கி வீசப்பட்டது அவசர கால உதவி என்ற முறையிலே அவசர அவசரமாக அள்ளிக் கொட்டினார்கள். இவற்றையெல்லாம் ஒழுங்கு படுத்தக் கூடிய அதிகார நிலையிலுள்ள எவரும் எங்கள் பிரதேசத்திலே இருக்கவில்லை இதன் விளைவாக ஏராளமான பொருட்களுக்கு சேதமும் விரயமும் ஏற்பட்டது.

மக்கள் எதிர்பார்ப்பவர்களாகவும் எதிர்பார்க்கும் மன நிலையோடும் வேதனையோடும் இருந்தார்கள் மனோ நிலை பாதிக்கப்பட்டு அதிர்ச்சிக்கு உள்ளான மக்கள் மரணங்கள் பலவற்றை சந்தித்த மக்கள் மனோ நிலை மாற்றத்திற்காக பல உள வளத்துறை ஆலோசகர்கள் புறப்பட்டார்கள். இரண்டு நாள் பயிற்சியோடு புறப்பட்ட இவர்கள் மேலும் மக்களின் மனோ நிலையை சிக்கலாக்கி விட்டார்கள். ஒரு மனிதனுடைய மன உணர்வுகளை கையாளுவதற்கு எவ்வளவோ காத்திரமான அறிவும் அனுபவமும் இருக்க வேண்டும். என்பதை மறந்து 50 -60 வயதினருக்கு 20 வயதிற்கு உட்பட்ட இளையோர் சென்று ஆலோசனை அறிவுரை வழிகாட்டல்களை செய்து வருகின்றார்கள். எதை எதையெல்லாம் உளவியல் ரீதியாக செய்யக் கூடாதோ அதையெல்லாம் அவர்கள் ஆலோசனை கூறுவதாகக் கூறிக் கொண்டு செய்தார்கள். பல சர்வதேச நிறுவனங்களும் உளவளத் துறை நடவடிக்கைகளுக்கு அதிகளவு பணத்தினை வாரி இறைத்தனர் நீண்ட கால கண்ணோட்டதில் இவை பார்க்கப்படவில்லை.

கடந்த தை மாதம் ஒவ்வொரு பிர தேசத்திலும் வேண்டிய உணவுப் பொருட்கள் துணி உடு பிடைவைகள் என்பனவற்றின் தேவைகள் பற்றி அறியாது தனிப்பட்ட முறையிலும் ஸ்தாபன ரீதியிலும் அள்ளிக் கொண்டு வந்து கொட்டினர்கள். சில கிராமங்களிலே இரவில் 8 மணிக்குப் பிறகு நூற்றுக் கணக்கான உணவுப் பொதிகள் வீசப்பட்டன. கொடுக்க வழி தெரியாது கொடுப்பது யாரிடம் என்று புரியாமலும் செல்வதற்கு பாதை சரியில்லை இந்த நிலையிலே நூற்றுக் கணக்கான உணவுப் பொதிகள் வீணானதை நாம் நேரிலே கண்டோம்

உணவுப் பொருட்கள் அல்லாத பொதிகள் ஏராளமாக மக்களுக்கு கொடுக்கப்பட்டன ஆனால் இவை யாவும் மக்களுக்குப் பயன்படவில்லை என்பதுதான் உண்மை. உதாரணமாக அம்பாறை மாவட்டத்தில் சுமார் 18000 குடும்பங்கள் மிக மோசமாக பாதிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்ட நிலையில் சுமார் 38000 மேற்பட்ட உணவல்லாத பொதிகள் சர்வதேச நிறுவனங்களால் வழங்கப் பட்டதாக கணக்குகள் தெரிவிக்கிறன இதன் பிரகாரம் பாதிக்கப்படாத மக்களுக்கும் பொதிகள் கிடைத்தது என்பதுடன் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 2'3தடவைகள் கிடைத்துள்ளன. ஆனால் இவற்றை இம் மக்கள் உண்மையில் பயன்படுத்தவில்லை என்றே தெரிகிறது இப் பொதிகளில் அடங்கிய பல பொருட்கள் இடைத்ரகர்கள் மூலமாக குறைந்த விலைக்கு வெளியிலே விற்கப்பட்டன வேறு செலவுகளுக்குப் பணமில்லாத நிலையில் பாதிக்கப்பட்ட மக்கள் இவற்றை விற்பதைக் காணக் கூடியதாக இருந்தது ரூ 150 பெறுமதியான படுக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரிப்புகள் ரூ 50 இற்கும், ரூ 140 பெறுமதியான பால்மா பக்கற்றுகள் ரூ 40-50 ரூபாயிற்கும் விற்கப்பட்டதை காணக் கூடியதாக இருந்தது. இவையெல்லாம் திட்டமிடப்படாத நடவடிக்கையின் விளைவு என்றுதான் சொல்ல வேண்டும்.

இது போலவே தான் பல்வேறுபட்ட பிரச்சனைகளை மக்கள் எதிர்கொண்டிருந்தார்கள் அடிப்படைத் தேவையான குடி நீர் பல இடங்களிலே காணப்பட்டாலும் அது குடிப்பதற்கு உகந்ததல்ல. கரையோரங்களில் கடல் நீரின் தாக்கத்தால் நன்நீர் மாசடைந்து உவர் நீராக மாறியுள்ளது. கடல் அலைகளினால் மண் அரிக்கப்பட்டது. மக்கள் வாழும் இருப்பிடங்களுக்கு கடல் நீர் வந்து பின்னர் இந் நீர் முழுவதும் நன்னீருடன் சேர்ந்து வெளியேறி கடலிலுள் சென்று விட்டது. தரையின் சமநிலை பாதிக்கப்பட்டதன் விளைவாக ஆறுகள், களப்புகளிலே இருந்த நீர் எல்லாம் கடலுக்குள் ஓடி வழிந்து விட்டன. இதன் விளைவாகப் பாரிய குடி நீர்த் தட்டுப்பாடு இப் பிரதேசங்களிலே காணப்படுகின்றது. பெரும்பாலான பச்சைத் தாவரங்கள் கடற்கரையிலே அழிந்து போய் விட்டன. பொருளாதார நிலமை இதை விட மோசமாகக் காணப்படுகின்றது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள் மற்றுமொரு பிரச்சனையை எதிர் கொண்டார்கள் இலவசமாக உணவுப் பொருட்களும் ஏனைய பொருட்களும் கிடைக்கின்ற காரணத்தினால் இக் காலப்பகுதியில் வயல்களில் அறுவடையில் ஈடுபடுகின்ற கூலித் தொழிலாளர்கள் தொழிலுக்குப் போகவில்லை. இதன் காரணமாக அவர்கள் தமது உழைப்பை இழந்தது மட்டுமல்லாமல் விசவாயிகள் தமது நெல்லையும் அறுவடை செய்ய முடியாத நிலை ஏற்பட்டது. இதனால் பொருளாதார ரீதியாகத் தாக்கங்கள் பல இக் காலப்பகுதியில் ஏற்பட்டது.

எமது பிரதேசத்தில் பாரிய பிரச்சினைகள் இருந்தும் கூட இவற்றைத் தீர்பதற்கோ இவற்றைப் பற்றிக் கவலைப்டுவதற்கோ அதிகமானோர் இல்லை எனபதுதான் கவலைக்குரிய விடயமாகும். ஒவ்வொரு நிறுவனமும் நான் முந்தி, நீ முந்தி எனப் போட்டி போட்டுக் கொண்டு தமக்கேற்றவாறு பொருட்களை வாரி வழங்கியதே தவிர இவை மக்களுக்குப் பயன்படுத்தக் கூடிய நிலையில் உள்ளதா? என்பதைச் சற்றும் யோசிக்கவில்லை. ஏராளமான எமது மக்களால் பாவிக்கப்படாத, பாவிக்கத் தெரியாத உணவுப் பொட்டலங்கள் பால்மா, நூடில்ஸ் போன்றவை வீணாக விரயம் செய்யப்பட்டதைக் காணக் கூடியதாக இருந்தது.

இவையெல்லாம் எமது பொறுப்பற்ற தன்மையின் வெளிப்பாடுகளே.

அதே வேளையில் அரச அதிகாரிகள் செய்வதறியாது திகைத்து நின்றார்கள். அரசாங்கம் என்னதான் நடவடிக்கை எடுத்தாலும் இவ்வதிகாரிகள் மக்களோடு நன்றாகக் கலந்து பணியாற்ற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. பல இடங்களில் அரச அதிகாரிகள் தாக்கப்பட்டார்கள், அரச அலுவலகங்கள் சேதப்படுத்தப்பட்டன, உணவுப் பொருட்கள் வைக்கப்பட்ட களஞ்சிய அறைகளில் பொருட்கள் சூறையாடப்பட்டன. இது மக்களின் பொறுப்பின்மையை எடுத்துக் காட்டுகிறது. ஆங்காங்கே உணவுப் பொருட்களையும் பொதிகளையும் அபகரித்து மக்களுக்கு விநியோகிக்க என்று பல குழுக்கள் உருவாகின சில குழுக்கள் வன் முறையில் கூட இறங்கின பலவந்தமாகப் பொருட்கள் பறித்து எடுக்கப்பட்டன. இப்படியான செயல்களும் சில இடங்களில் நடைபெற்றது. இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு இது வரை காலமும் மக்களுக்கு சேவையே புரியாத சமூக சேவையாளர்கள் பலர் தாமும் முந்தியடித்துக் கொண்டு தலை காட்ட வந்ததன் விளைவாகப் பொறுப்பற்ற நடவடிக்கைகள் பல நடந்தேறின.

இக் காலப்பகுதியில் அரச இயந்திரங்கள் சிக்கல் நிலைகளை எதிர் கொண்டது. அரசாங்க அதிகாரிகளில் மிக நேர்மையாக உழைத்த சிலர் கூட நடைமுறைச் சிக்கல்களை எதிர் கொண்டார்கள். அரச சார்பற்ற நிறுவனங்கள் உதவிக்கு ஓடி வந்தன. ஆனால் அவர்களுங் கூட முழுமையாகத் தங்களுடைய வளங்களைப் பயன்படுத்தத் தவறி விட்டனர். சமூகக் கட்டமைப்பு முற்றிலும் சீர்குலைக்கப்பட்டது. “தடியெடுத்தவர்கள் எல்லாம் தண்டக்காரர்கள்” என்ற நிலையில் உரத்துப் பேசக் கூடியவர்களும், வல்லமையுள்ளவர்களும் முன்னுக்கு நின்றார்கள் வலிமையற்றவர்கள் ஒதுங்கியே நிற்க வேண்டிய நிலமை ஏற்பட்டது.

சுனாமித் தாக்கத்தினால் நேரடியாகத் தாக்கப்பட்ட மக்கள் மட்டுமல்லாமல் ஒட்டு மொத்தமாக வட கிழக்கு வாழ் தமிழ் மக்களுடைய வாழ்வியல் நிலையில் கூட சுனாமி மாற்றங்களை ஏற்படுத்தியது. எமது சமூகக் கட்டமைப்பில் பொறுப்பற்ற நிலையினை இது நன்றாகவே வெளிப்படுத்தியது. சமூகத்தை வழி நடத்தக் கூடிய சரியான தலைமைத்துவம் உருவாக வில்லை என்பதை இது எடுத்துக் காட்டுகிறது. மிகமோசமான பொருளாதாரப் பாதிப்புகள் சுனாமியினாலும் அதன் பின்னர் ஏற்பட்ட நடவடிக்கைகளினாலும் ஏற்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழல் பெருமளவு சேதப்படுத்தப்பட்டது. சுற்றாடல் மாசடைந்து காணப்பட்டது. மனித நேயம் பெருமளவு அழிந்து விட்டது.

எவ்வளவு பொறுப்பில்லாமல் எமது அதிகாரிகள் நடந்து கொண்டார்கள் என்பதற்கு ஒரு சான்றாகக் கூறினால் சேதமடைந்து துண்டுகளாக்கப்பட்ட கட்டட நிர்மாணக் கழிவுப் பொருட்களை எங்கு கொட்டலாம் என்று பல அதிகாரிகளிடம் கலந்தாலோசித்த பொழுது கடற்கரையில் கொட்டுங்கள் என்ற பதிலே வந்தது. இங்கு கழிவுப் பொருட்களை கொட்டுவதன் மூலமாக கடல் மாசடைவதும், கரையோரப் பகுதிகளில் வாழ்கின்ற உயிரினங்களுக்கு எதிர் காலத்தில் ஏற்படக் கூடிய ஆபத்து நிலமை பற்றி இவர்கள் கருத்தில் கொள்ளவில்லை

அதே போல் பிரதான வீதியோரங்களிலே நில அதிர்வு, மற்றும் அலைகளின் தாக்கம் காரணமாகப் பெருமளவு குழிகள் உருவாகியிருந்தன. இவற்றை நிரப்புவதற்கு இந்தக் கழிவுப் பொருட்களைக் கொண்டு கொட்டி நிரப்பியிருக்கலாம். ஆனால் அதற்குப் பதிலாக கழிவுப் பொருட்களைக் கொண்டு கடற்கரையில் கொட்டிவிட்டு கடற்கரை மணலை மேலும் தோண்டி எடுத்துக் கொண்டு வந்து வீதியோரங்களை நிரப்பிக் கொண்டிருந்த காட்சியைத்தான் நாம் காணக் கூடியதாக இருந்தது. மேலும் இந்த நடவடிகையானது கடல் நீரை மக்கள் வாழும் இடங்களுக்குப் போவதற்கு வழி செய்து கொடுத்துள்ளது. இவ்வாறு பொறுப்பற்ற விதமாகச் சுற்றாடல் நிலமையை மோசமாக்கிய செயற்பாடுகளைப் பலர் செய்திருந்தார்கள். இவற்றோடு சில இடங்களில் வீதியோரப் புனரமைப்பு என்ற பெயரிலே இருக்கின்ற வீதியைத் தோண்டி விட்டு மக்களின் போக்குவரத்திற்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தினர்.

இந் நிலமைகளை நாம் உற்று நோக்குகின்ற பொழுது எந்தவிதமான ஒருங்கிணைப்போ, செயற்பாட்டுத் திட்டமிடலோ நடைபெறவில்லை என்பது வெளிப்படையாகத் தோன்றுகின்றது.

## நாம் செய்யக் கூடியது என்ன?

இப் புனர்வாழ்வுச் செயற்பாட்டிற்கென கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்பட வேண்டும். இக் கட்டமைப்பின் மூலமாகச் சகல வளங்களும் ஒருங்கிணைக்கப்பட்டு அடுத்த 8-10 ஆண்டுகளுக்கான புனர்வாழ்வுத் திட்டமொன்று வரையப்பட்டு அதற்கான வளங்கள் இணங் காணப்பட்டு அவற்றை உரிய முறையிலே பயன்படுத்தவதற்கான திட்டம் தீட்டப்பட்டு இவற்றைச் செய்வதற்கான மனித வளங்கள் அடையாளம் காணப்பட்டு வேண்டிய வழிகாட்டல்களும் பயிற்சிகளும் அளிக்கப்பட்டு மக்களுக்கு இந் நிலமையைப் புரிய வைக்கப்பட்டு மக்களுடைய கருத்து அறியப்பட்டு மக்களின் விருப்பிற்கான செயறிட்டங்களைச் செய்கின்ற நிலமை தோற்றுவிக்கப்படல் வேண்டும்.. இது வார்தையால் கூறுவதற்கு இலகுவாகினும் இதன் பின்னால் பாரிய திட்டமிடல் ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டும்.

அங்கொன்றும் இங்கொன்றுமாக சில நிறுவனங்கள் ஆழமாகச் சிந்தித்தாலும் இது கடலில் கரைத்த புளி போன்று நல்ல நிறுவனங்களின் திட்டங்கள் தேசிய மட்டத்தில் ஊழல் புரிகின்ற நிறுவனங்களால் அடிபட்டுப் போகின்றது கிராமிய மாவட்ட தேசிய மட்டத்திலான ஒருங்கிணைப்பு ஒன்று இல்லாத நிலையில் இது சாத்தியப்படாது. இவ்வாறு பல்வேறு மட்டங்களிலான ஒருங்கிணைப்புக் குழுவில் ஆர்வலர்கள் சமூக அக்கறையுள்ளவர்கள் அனைவரும் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும். அதனை விடுத்துத் தமக்கு வேண்டிய தலையாட்டக் கூடிய ஒரு சிலரை மட்டும் எல்லா மட்டங்களிலும் போட்டு மக்கள் மீது தங்கள் நலத்திற்கான திட்டங்களைத் திணிக்கின்ற வேலைத்திட்டங்களை அரசாங்க அதிகாரிகளும், அரச சார்பற்ற நிறுவனங்களும் விட்டு விட வேண்டும். இல்லாவிட்டால் சுனாமி செய்த அழிவை விட மனிதனால் மனிதனுக்கு ஏற்படுத்திக் கொண்டிருக்கின்ற அழிவு அதிகமாக இருக்கும் என்பதை காலம் எமக்கு விரைவில் உணர்த்தும்.


### தொடர்பு முகவரிகள்

யாழ்ப்பாணம்
SOND
No-60,
Arasadi Road,
JaffnaTe.P:021-2226700
E-Mail :-sondjf@sltnet.lk

அக்கரைப்பற்று
SOND
Akkaraipattu -03
Te.P: 067-2277475.
Fax : 067-2277896
E-Mail :-senthu@eureka.lk

தொடர்பாளர்
ச.செந்துராசா (J.P)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைமைத்துவ வழிகாட்டல்கள்

## தலைவர்களுக்கான குறிப்புக்கள்.

எதிர் காலத்தை ஒளிமயமாக்கிக் கொள்ளுங்கள். உங்கள் செயற்பாடுகளில் பரந்தளவிலான கண்ணோட்டத்தை வைத்திருங்கள். சூரியனானது தனது கிரகணங்கள் மூலம் உலகெல்லாம் ஒளியைப் பாய்ச்சுவது போல ஒரு சிறந்த தலைவரானவர் தனது செயற்பாடுகளினூடாக எல்லோருக்கும் நன்மை கிடைக்குமாறு செய்ய வேண்டும். முகில்கள் மறைத்துச் சூரிய ஒளி குறைவாகத் தென்படுகின்ற போதிலும் எமக்கு ஒளி கிடைக்கின்றது. சூரியன் இருப்பது உலகிற்குத் தெரிகின்றது. அது போலவே தடைகள் பிரச்சினைகள் ஏற்படுகின்றபோதும் ஒரு சிறந்த தலைவரானவருடைய செயற்பாடுகள் சில இடையூறுகள் ஏற்படினும் அதன் பயன்கள் மக்களிற்கு என்றைக்குமே கிட்டிக் கொண்டிருக்கும். நாம் மற்றவர்களிற்கு வழிகாட்டுகின்ற ஒளியூட்டுகின்ற பரந்த நோக்குடைய தலைவர்களாக இருப்பது சாலச் சிறந்தது

## தலைவர்களிற்கான இலக்குகளை நிர்ணயித்தல்.

ஒவ்வொரு தலைவரும்தனது நிறுவன இலக்குடன் தமக்கென்றும் ஒரு இலக்கை வைத்துக் கொள்ள வேண்டும். இது வரையறையின்றிச் செல்லாது அவரால் நிருவகிக்கக் கூடியதாக இருக்க வேண்டும். இது அவருக்குத் திருப்தியளிப்பதாக இருக்க வேண்டும். தனது இலக்கை அவர் பூர்த்தி செய்கின்ற போது இதயத்திலே பெரும் மகிழ்ச்சியும் திருப்தியும் ஏற்பட வேண்டும்.வரையறையில்லாத இலக்கு முற்றிலும் அழிந்து விடும். உதாரணமாக நீரை நாம் அணைக்கட்டுப் போட்டு கட்டுப்படுத்தி நெறிப்படுத்துவதன் மூலம் பயிர் செய்கை பண்ண முடியும். இது எல்லோருக்கும் தெரிந்த ஒரு விடயமாகும். அதிகளவு வெள்ளம் வந்து அளவுக்கதிகமான நீர் தேங்குமிடத்து அது அணைக்கட்டை உடைத்து அதுவே பயிர்களையும் அழிப்பதுடன் முழுக் கிராமத்தினையுமே அழித்துவிடும். எனவே எதையும் வரையறையுடன் செய்ய வேண்டுமென்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

எம்முடைய இலக்குகள் தொடர்பாகக் கீழ்வரும் கேள்விகளை எமக்கு நாமே கேட்டுக் கொள்ளல் வேண்டும்.

1. இந்த இலக்கு மூலமாக நாம் எதனை அடைந்து கொள்ளப் போகின்றோம். எனக்கு அதனூடாக என்ன தேவையாக இருக்கின்றது?
2. என்னுடைய இலக்குகள் மிகவும் தனித்துவம் வாய்ந்ததா?
3. நான் என் விடயத்திலும் பிறர் விடயத்திலும் கண்டிப்பானவனாக இருக்கின்றேனா?
4. என்னைச்சுற்றியுள்ளவர்கள் ஆக்கபூர்வமான விடயங்களை விமர்சனம் செய்து வெளியீடு செய்வதற்கு நான் ஊக்கப்படுத்துகின்றேனா?
5. என்னுடன் உள்ள எல்லாத் திறமைகளையும் வெளிக் கொனர்வதற்கும், விருத்தி செய்வதற்கும் போதியளவு நேரத்தையும், முயற்சியையும், ஆக்கத்தையும், நான் செயற்படுத்துகிறேனா?
6. என்னுடைய ஓய்வு வேளைகளை நான் எவ்வாறு பயன்படுத்துகிறேனா?
7. என்னுடைய மனப்பாங்கு எப்படியிருக்கின்றது.
8. என்னுடைய தொடர்பாடல் எப்படிப்பட்டதாக இருக்கின்றது.?
9. நான் ஓய்வு நேரங்களை பயனுள்ள முறையில் கழித்துக் கொள்கின்றேனா? அல்லது வேண்டாத, எமக்குத் தீங்கான விடயங்களில் கழிக்கின்றேனா?
10. நான் நிலமையைச் சமாளித்து விட்டுக் கொடுக்கும் தன்மையுள்ளவனாக இருக்கின்றேனா?
11. நான் என்னுடைய வரையறைகளை சரியாக வகுத்துக் கொண்டிருக்கின்றேனா? வரையறையில்லாமலும், கண்டிப்பில்லாமலும், பொறுப்பில்லாமலும், நடந்து கொள்கின்றேனா?
12. உலகமெல்லாம் பலத்த நெருக்கடிக்குள்ளாகியிருக்கின்றது, சூழல் எம்மைப் பாதிக்கின்றது. எனவே நாமும் நெருக்கடிக்குத் தள்ளிவிடாது ஒரு சமநிலையைப் பேணி எமது இலக்கையும் எமது ஓய்வையும் பார்த்துக் கொள்ள வேண்டும்.

பாதிப்புற்ற மக்களிற்காக நாம் பணியாற்றுகின்றபோது எமது நல்வாழ்த்துக்களையும் பிரார்த்தனைகளையும், ஆசீர்வாதங்களையும், வளத்தையும், நேரத்தையும், எமது சக்தியையும், அவர்களுக்காகக் கொடுக்கின்றோம். இவற்றில் தலைவர்களாகிய நாம் ஒவ்வொருவரும் எதனை மற்றவர்களிற்குக் கொடுக்கப் போகின்றோம் என்பதனை சிந்திக்க வேண்டும்.

## எமக்கு மற்றவர்கள் கற்பிக்க முடியுமா?

பண்டைக்கால குருகுலக் கல்வி முறை மூலம் ஓர் ஆசிரியரானவர் ஒரு மாணவருக்குக் கல்வியை வழங்குமுன்னர் அம்மாணவர் கற்பதற்கு ஆர்வம் காட்டுபவரா? அவர் கற்பிக்கப்படக் கூடியவரா? என்பதையே பார்ப்பார்கள். கற்பதற்குத் தயாராக இருந்தால் வேண்டிய கல்வியை அவருக்கு வழங்குவார்கள். இதே போலவே தலைவர்களும் மற்றவர்களிடமிருந்து கற்றுக் கொள்ள ஆர்வம் காட்டுகிறார்களா?, அவர்கள் கற்பிக்கப்படக் கூடியவர்களா? என்பதனைப் பார்க்க வேண்டும்.

சில தலைவர்கள் எமக்கு எல்லாம் தெரியும் என நினைப்பதன் காரணமாக எதையும் எவரிடமும் கற்பதற்குத் தயாராக இல்லை. "இவரிற்கு ஒன்றும் தெரியாது, என மற்றவர்கள் தவறாக எண்ணிவிடுவார்கள்" என்று எண்ணுவதன் மூலமாகவே அவர்கள் அவ்வாறு அச்சப்படுகின்றார்கள். உங்களைச் சுற்றியுள்ளவர்கள் தயக்கமின்றி உங்களுக்கு ஆலோசனை சொல்லும்படியான சூழலை உருவாக்குபவராக, எவரது கருத்துக்களையும் பரிசீலிக்கக் கூடியவராக இருப்பின் வளர்வதற்கு நீங்கள் ஒரு சிறந்த தலைவராவதற்கு தயாராகிவிட்டீர்கள் என்பது அர்த்தமாகும்.

எம்மைச் சூழவுள்ளவர்களிடம் நம்மை அளவிடுமாறு கேட்க வேண்டும். எமது செயற்பாடுகள் உங்களுக்குப் பிடித்திருக்கின்றதா? என்ன மாற்றிக் கொள்ள வேண்டும்? எத்தகைய ரீதியாக என்னுடைய அணுகுமுறை இருக்க வேண்டும்? நான் என்ன தவறு செய்திருக்கின்றேன்? என்பது போன்ற கேள்விகளைக் கேட்டு அவர்களிடமிருந்து வருகின்ற கருத்துக்களை நேர்மையாக பரிசீலித்து தம்மை மாற்றிக் கொள்ள முயலுகின்ற தலைவர்கள் வளர்ந்து விடுவார்கள், மற்றவர்களால் ஏற்றுக் கொள்ளப்படுவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைவரும் பாராட்டும்படி திறன்மிகு தகவல் சமர்ப்பணம்

ஒன்றை மேற்கொள்வது எப்படி?

(வளவியலாளர்களிற்கான வழிகாட்டி)

## பார்வையாளர்கள்/ பங்குபற்றுனர்களை விழிப்படையச் செய்தல் :-

தகவல்களை சமர்ப்பணம் செய்பவரை கவனித்துக் கொண்டிருக்கும் பங்குபற்றுனர்கள், அல்லது பார்வையாளர்கள் எப்பொழுதும் அவரைக் கவனித்தாலும் தாங்கள் தங்களுடைய சிந்தனைகளிலும், செயல்களிலும், எண்ணங்களிலும், ஈடுபட்டிருப்பார்கள். அவர்கள் அனைவருடைய கவனத்தையும் எங்கள் பால் திருப்புவதற்கு மேடையில் ஏறித்தோன்றிய உடனே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தக் கூடிய நகைச்சுவை ஒன்றையோ, அல்லது சிந்தனையைத் தூண்டி விடும் தகவல் ஒன்றையோ, அல்லது எல்லோரையும் கவரக் கூடிய நடிப்பு, அல்லது வசீகரமான செயற்பாடு ஒன்றையோ, முதலில் மேடையில் செய்ய வேண்டும். அதே வேளையில் இறுக்கமான நகைச்சுவையையோ அல்லது எவரையும் எந்த வகையிலும் பாதிக்கின்ற நகைச் சுவையையோ வெளியிடாமல் ஏதாவது ஒரு செயற்பாட்டைச் செய்யலாம்.

எப்போதும் பார்வையாளர்களையும் பங்குபற்ற வைக்கின்ற கேள்விகளைக் கேட்கின்ற அல்லது கேள்விக்கொத்துக்களை கொடுத்து நிரப்பி எடுக்கின்ற செயற்பாட்டில் ஈடுபடலாம். அத்துடன் ஒளிப்படக் கருவி (OHP) மூலம் வித்தியாசமான முறையில் காணபிக்கலாம், ஒரு சித்திரம் அல்லது, வேறு விதமான செயற்பாடுகள் மூலம் அவர்கள் கவனத்தை ஈர்க்கலாம். பாடல் அல்லது, கவிதை வரி, அல்லது நடிப்பின் மூலமாக அவர்களது கவனத்தை ஈர்க்கலாம்.

இதே போன்று தகவல் சமர்ப்பணத்தை முடிவிற்குக் கொண்டு வரும் வேளையில் மன்னிப்பு கேட்பதோ, தான் கூறியவற்றில் பிழை இருந்தால் மன்னிப்புக் கோருவதையோ விடுத்து நடிப்பு ரீதியில், அல்லது வேறுவசதியான ஒரு வழியில் அனைத்துத் தகவல்களையும் ஒருங்கிணைத்து வழங்கக்கூடிய முறையினைக் கையாள வேண்டும். அல்லது நீங்கள் கூறிய விடயங்கள் அனைத்தையும் கவிதை வரியில் உள்ளடக்கலாம், அல்லது பாடல் வரியில் உள்ளடக்கலாம், அல்லது திருக்குறளில் உள்ளடக்கலாம், அவர்கள் எதிர்பாக்காத ஒரு நடவடிக்கையைச் செய்து காட்டி நிகழ்வை முடிக்கலாம்.

எப்பொழுதும் உங்கள் மீது கவனத்தைக் கொண்டிருந்த பார்வையாளர்களுக்கு மிகவும் நன்றி கூறி "என்னுடைய கருத்துகளைக் கேட்டமைக்கு உங்களுக்கு எனது மனப்பூர்வமான நன்றிகள்" என அவர்களின் உள்ளம் கவரக்கூடிய வகையில் சில வார்த்தைகளைக் கூறி நிகழ்வை முடித்து விடை பெற வேண்டும்.

உங்களுடைய சமர்ப்பணமானது சிறந்த முறையில் ஒருங்கிணைக்கப்பட்டு செய்யப்பட்டிருந்தால் உங்கள் நிகழ்ச்சியைப் பார்த்துக் கொண்டிருக்கும் அனைவருக்கும் ஒரு சிறந்த பரிசு கிடைத்தது போன்ற உணர்வு ஏற்படும்.

## மேடைக்கூச்சம்

நீங்கள் மேடைக்கு வந்து பேசத் தொடங்கிய உடனே உங்கள் தோளின் மீது ஒரு குரங்கு வந்து உட்காந்து விடும். அது உங்கள் தலையைப் பிடித்துக் கவிழ்த்து விடும். உங்கள் கண்கள் நிலத்தைப் பார்க்கும். உங்கள் தோளில் ஏறி விராண்டும். இதனால் உங்கள் கைகள் முதுகைச் சுரண்டச் சொல்லும். அல்லது இடுப்பைச் சுற்றி வட்டமிடும். அதன் காரணமாக நீங்கள் உங்கள் மேலங்கியைக் கொஞ்சம் சரிசெய்து விடுவீர்கள். இப்படி ஒரு குரங்குச் சேஷ்டை பண்ணுவது சர்வ சாதாரணமாகி விட்டது. அதாவது நீங்கள் மேடைப் பயிற்சியின்மை காரணமாக குரங்கு உங்கள் மீது ஏறி என்ன சேஷ்டைகள் செய்யுமோ அல்லது இடையூறு செய்யுமோ அதையெல்லாம் செய்வீர்கள். இவ்வாறு மேடைக் கூச்சத்தினைப் போக்காத வரையில் எம்மால் ஒரு சரியான சமர்ப்பணத்தையோ அல்லது சொற்பொழிவையோ வழங்க முடியாது.

## மேடைக்கூச்சத்தை எவ்வாறு விரட்டுவது?

இத்தகைய மேடைக் கூச்சம், அல்லது அச்சத்தை நீக்க நீங்கள் உங்களைத் தயார் செய்து கொள்ள வேண்டும். மேடையில் ஏறியவுடனே நீங்கள் நேராக நிமிர்ந்து பார்வையாளர்களது கண்களைப் பாருங்கள்.

(தொடர்ச்சி பக்கம் 9ல்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடி நீரை வைத்திருக்கச் சிறந்த

# பித்தளைப் பாத்திரங்கள்

இப் பாத்திரங்கள் தமிழ் மக்களால் அதிகளவு பயன்படுத்தப்பட்டது. பெரும்பாலான மக்கள் குடி நீரை பித்தளைப் பாத்திரங்களிலேயே எடுத்து பயன்படுத்தினார்கள். அப் பாத்திரங்கள் இலங்கையிலும் கூட அதிகளவு பயன்படுத்தப்பட்டு வந்தது. சிங்கள மக்களும் பெருமளவு இத்தகைய பாத்திரங்களை பயன்படுத்தியிருக்கின்றார்கள். ஆனால் தற்போதைய பிளாஸ்டிக், எவர் சில்வர், அலுமினியப் பாத்திரங்கள் போன்றவற்றின் வருகையினால் இப் பாத்திரங்கள் இன்று எம் மக்கள் மத்தியில் மறைந்து போய் விட்டன.

இன்றைக்கும் குத்துவிளக்குகள், வெற்றிலைத் தட்டங்கள், மலர் வைக்கின்ற தட்டுகள், போன்றவை பித்தளையினாலேயே செய்யப்படுகின்றன. இவற்றைத்தான் மக்கள் இன்னமும் பாவிக்கின்றார்கள். ஆனால் மிக முக்கிமாக இந்த பித்தளைப் பாத்திரங்களிலே நீரை வைத்து பாவிக்கின்ற போது அந்த நீர் மகத்துவம் பெறுகின்றது.

இத்தகைய பாத்திரங்கள் இன்றைக்கும் பொதுவாக ஆலயங்களிலே பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இதற்கு பின்னால் மந்திர சக்தியொன்றுமில்லை. உண்மையில் விஞ்ஞான ரீதியாக பார்த்தால், இப் பாத்திரங்களில் வைக்கப்படுகின்ற நீர் நோய் எதிர்ப்பு சக்திகளை கொண்டு இருக்கின்றது. நீர் சம்மந்தப்பட்ட வியாதிகளை உருவாக்குகின்ற கிருமிகளை அழிக்கின்றது இதன் காரணமாகவே இதனில் வைத்து பருகப்படுகின்ற நீர் தூய்மையானதாக கருதப்படுவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. ஆதிகாலத்தில் இருந்து இத்தகைய பாத்திரங்கள் பாவிக்கப்பட்டு வந்ததாலும் புதிய பொருட்களில் வருகையும் நாகரீக மோகம் போன்றவற்றின் காரணமாக இவற்றை எமது மக்கள் கைவிட்டு விடுகின்றனர்.

பெரும்பாலான யாழ்ப்பாணத்து வீடுகளிலே வீட்டின் எங்கோ ஒரு மூலையில் இந்த பித்தளைப் பாத்திரங்கள் இன்னமும் தேங்கிக் கிடக்கின்றன இப் பாத்திரங்களில் வைக்கப்படுகின்ற நீரின் தன்மை பற்றி ஆராச்சி செய்த ஹொப் ரீட் என்பவர் **Natore** என்ற பத்திரிகையிலே எழுதிய கட்டுரையில் இப் பாத்திரங்களின் நன்மை பற்றி விளக்கியிருக்கின்றார். அத்துடன் இங்கிலாந்தில் இருக்கின்ற நோத் உம் பிரியா (North Em Priya)பல்கலைக்கழகம் நடாத்திய ஆய்வின் பொழுது நுண்ணங்கிகளை கொல்கின்ற சக்தி பித்தளைப் பாத்திரங்களில் உள்ள நீருக்கு இருப்பதாகக் கண்டு பிடித்து இருக்கின்றார்கள்.

பொதுவாகவே பித்தளைப் பாத்திரத்தில் வைக்கப்படுகின்ற நீர் நோய்களைக் குணப்படுத்தும் சக்தியுள்ளதாக தெய்வீக நம்பிக்கையுள்ளதாக மக்கள் கருதுகின்றார்கள். இதில் ஒன்றும் உண்மை இல்லை. விஞ்ஞான ரீதியாக பார்த்தால் பித்தளை பாத்திரங்கள் தொற்று நோய்களை உருவாக்கக் கூடிய கிருமிகளை அழிக்கும் தன்மையைக் கொண்டு இருக்கின்றன. மண் பாத்திரங்களில் அல்லது ஏனைய பாத்திரங்களில் வைக்கப் படுகின்ற நீரையும் பித்தளைப் பாத்திரங்களில் வைக்கின்ற நீரையும் பரிசீலனை செய்து பார்க்கின்ற போது பித்தளைப் பாத்திரத்தில் மிகக் குறைந்தளவு பற்றீரியாக்களே காணப்படுகின்றது என்பது ஆய்வாளர்களின் கருத்து.

தினசரி 10 லீற்றர் நீரைப் பருகுகின்ற ஒருவர் அவர் உடலுக்குத் தேவையான நாகம், செப்பு போன்ற தாதுப் பொருட்களை இயல்பாகவே பெற்றுக் கொள்கிறார். பித்தளைப் பாத்திரத்தில் வைத்திருக்கின்ற நீருக்கு இத்தகைய தாதுப் பொருட்களை நீரில் கலக்க செய்கின்ற சிறப்புத் தன்மை காணப்படுவதே இதற்கு காரணமாகும் .

எனவே நாம் புதுமைக்கு திரும்புவோம் என்று கூறப்பட்டாலுங் கூட பழமை சிறந்ததாக இருக்கும் பொழுது அவற்றைப் பயன்படுத்தினால் என்ன? சிந்திப்போம், பயன்படுத்துவோம்.

*(9ம் பக்கத் தொடர்ச்சி ... அனைவரும் பாராட்டும்படி தகவல் ....)*

கேள்விகளைக் கேட்கும்போது தொனியில் இறுக்கத்தன்மையைக் காட்டாது, அதே வேளை தெளிவான தொனியில் கேளுங்கள். இது பங்குபற்றுனர்கள் உங்கள்பால் அச்சம் கொள்வதை விடுத்து இயல்பாகப் பழகுவதற்கு வழியேற்படுத்தும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(7ம் பக்கத் தொடர்ச்சி...)

பார்த்து ஒரு புன்சிரிப்பை மலர விடுங்கள். நீங்கள் பார்வையாளர்கள் அனைவரையும் விட ஒரு சிறந்த பேச்சாளர் என்பதையும், அவர்களுக்கு ஒரு சிறந்த கருத்தை வழங்கப் போகின்றீர்கள் என்பதையும் தன்னம்பிக்கையுடன் மனதில் சொல்லிக் கொள்ளுங்கள்.

இதன் பின்னர் பார்வையாளர்களைக் கவரும் படியாக கேள்வியைக் கேட்பது, அல்லது ஒரு பாடலைப்பாடுவது, அல்லது ஒருவரை முன்னால் வரச் செய்து அவர் மூலமாக ஏதேனும் விடயங்களைக் கேட்பது, போன்ற செயற் பாடுகளின் மூலம் உங்கள் ஆளுமையை வெளிப் படுத்திப் பார்வையாளர்களின் கவனத்தை உங்கள் பக்கமாக ஈர்த்துக் கொள்ளுங்கள்.

நீங்கள் மேடைக்குப் புதியவர் என்பதை பங்குபற்றுனர்களுக்குக் காட்டிக் கொள்ளாதீர்கள்.

முக்கியமாகப் பயிற்சி அல்லது சொற் பொழிவிற்கான நேரத்திற்கு முன்பே அங்கு சென்றுவிடுங்கள். இதனால் பதட்டம் மூலம் எழும் அச்சத்தைப் போக்கிக் கொள்ள முடியும்.

## குரல்:-

தகவல் சமர்ப்பணத்திற்கு உங்கள் தொனி மிகவும் பிரதானமானது. தொனியிலே காணப்படும் ஏற்ற இறக்கங்கள், உச்சரிப்புத் தெளிவுகள், நெழிவு சுழிவுகள், தொனி மூலம் வசீகரிக்கும் தன்மை, சொற்களைக் கூறும் வேகம், என்பன பார்வையாளரைக் கவர்ந்திழுக்கும். மிகவும் தெளிவாகவும் சொற்களை விழுங்காமலும், உரத்தும் உங்கள் தகவலை வழங்குங்கள். மிகவும் நம்பிக்கையோடும், நாடக பாணியோடும் உங்கள் சொற்களைக் குழைவாகவும், இனிமையாகவும், தெளிவாகவும் தேவையான போது மாற்றிக்கொள்ளுங்கள். எப்போழுதும் உங்கள் தொனியின் மூலமாக உங்கள் எண்ணங்களை அவர்களுக்குத் தெளிவு படுத்தலாம் என்பதை மறந்து விடாதீர்கள்.

அளவிற்கு மீறி இதனை செய்து விடாதீர்கள். பிரதான கருத்துக்களைப் பல்வேறு தொனியில் அல்லது, பாணியில் அவர்களது உள்ளத்தில் பதியும் வண்ணம் வெளிப் படுத்துங்கள். உங்கள் சொற்களில் வேகத்தையும் ஏதாவது அதிர்ச்சியான அல்லது முக்கியமான விடயங்களை கூறும் வேளையில் மிக விரை வாகவும், மனதில் பதியும் விடங்களை மிகவும் ஆறுதலாகவும் தொனியைக் கட்டுப்படுத்திக் கூறுங்கள்.

(தொடர்ச்சி பக்கம் 8ல்...)

## நிறுவன மேம்பாட்டிற்கு தேவையானவை

1. சகல விடயங்களையும் ஆவணப்படுத்தல்.
2. சகல விடயங்களிலும் நேரத்தைக் கருத்தில் கொள்ளல்
3. சிறந்த தொடர்பாடல்
4. பணியாளர்களுக்கு வழங்க வேண்டிய பயிற்சிகள் பற்றி தலைவர்கள் தெரிந்திருத்தல்.
5. தலைமைத்துவ அறிவு.
6. சிறந்த அறிக்கையிடல்.
7. N.G.O என்றால் என்ன அதன் பணிகள் என்ன என்பது பற்றிய தெளிவு
8. பயிற்றப்பட்ட பணியாளர்களைத் தக்க வைத்தல்.
9. நிர்வாகப் பரவலாக்கம் / பொறுப்புகள் பகிர்ந்தளிக்கப்படல்.
10. சிறந்த தீர்மானங்களை எடுத்தல்.
11. பணியாளர்கள் மத்தியில் சுமுகமான உறவைப் பேணுதல்
12. அலுவலகச் சூழலைச் சிறந்த முறையில் அமைத்தல்.
13. சிக்கனத்தை அலுவலகத்தில் நடைமுறைப்படுத்தல்.
14. சிறந்த திட்டமிடல்.
15. காலத்திற்கேற்ப திட்டங்களைச் செயற்படுத்தல்.
16. உள் வெளி மட்டங்களில் சிறந்த தொடர்புகள்.
17. சிறந்த நிர்வாகக் கட்டமைப்பு.
18. நிறுவனத்தின் மீது பொறுப்பு அக்கறையுள்ள பணியாளர்களை உருவாக்கல்.
19. பணியாளர்களிடையே பல்துறை சார்ந்த அறிவினை உருவாக்குதல்.
20. சிறந்த முறையில் நிறுவனக் கலாசாரத்தைப் பேணல்.
21. தொழிநுட்ப உபகரணங்களை சிறந்த முறையில் பயன்படுத்தல்
22. வளங்களை உச்சப் பயன் கருதிப் பயன்படுத்தல்.
23. நிறுவனத்திற்கு முழுமையான பொறுப்பேற்கும் நபரை உருவாக்குதல்.
24. நிறுவனத்தின் தொலை நோக்கம் பற்றி பணியாளர்கள் தெளிவாக அறிந்திருத்தல்.
25. ஏனைய நிறுவனங்களிடையே முரண்பாடுகளைத் தவிர்த்தல்.

**நாமும் வாழ்வோம் !**
**பிறரையும் வாழ வைப்போம் !!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றியாளர்கள் நாம் அல்லவா?




## வெற்றியாளர்களிற்கான வழிகாட்டி

### இலட்சியத்தை அடைதல் :~

உங்களுடைய இலக்கு ஒன்றோ, அல்லது பலவோ அவற்றைத் தனித்தனியான தாளில் எழுதி எப்பொழுதும் நீங்கள் எங்கு சென்றாலும் உங்கள் சட்டைப் பையினுள் வைத்துக் கொள்ளுங்கள். அது ஒவ்வொன்றும் அடையப்படுகின்ற பொழுது அவற்றைத் தூக்கி வெளியே எறிந்து விடுங்கள். மற்றவைகளை அடையும் வரை அது உங்கள் பைகளிலேயே இருக்கட்டும். அதைப் பார்க்கின்ற பொழுதெல்லாம் அது உங்களுக்கு உங்கள் இலட்சியத்தை உறுத்திக் கொண்டு இருக்கும். இதன் மூலமாகவே புகழ் பெற்ற மனிதர்கள் பலர் எட்ட முடியாத இலக்கை எட்டியுள்ளார்கள் என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள்.

உலகின் மிகப் பெரிய கோடீஸ்வரர் ஒருவரை நான் சந்தித்தேன். அவரின் உயர்விற்குக் காரணம் என்னவென்று கேட்ட பொழுது, அவர். "இறைவனுடைய ஆசீர்வாதம், அவருடைய கருணை, என்னுடைய திட நம்பிக்கை, இறைவனுடைய சித்தத்தால் எல்லாம் நடக்கும் என்ற எண்ணமும் தான் இவற்றைச் சாதித்தது" என்றார். "இவ்வாறு நீங்களும் நம்புவீர்களானால் உங்களாலும் சாதிக்க முடியும்'. என்று கூறினார். முன்னேற வேண்டும் என்று நினைப்பது மட்டும் போதுமானதல்ல. எதை அடையப் போகிறீர்கள், எவ்வாறு அடையப் போகிறீர்கள், என்பதை தெளிவாக வரையறுத்துக் கொள்வது மிகவும் முக்கியமாகும்.

அண்மையில் மிகப் பெரிய மக்கள் கூட்டத்தைத் தலைமையேற்று நடாத்திக் கொண்டிருந்த சிறந்த தன்னம்பிக்கையுள்ள, இறை நம்பிக்கையுள்ள, வசீகரம் மிக்க ஒரு தலைவரை நான் சந்தித்தேன். அவரிடம் "நீங்கள் எவ்வாறு இதனைச் சாதிக்கிறீர்கள்" என்று கேட்ட பொழுது அவர் சொன்னார் "என்னுடைய வாழ்கையில் எல்லாமே தோல்வியாக இருந்தது, தொட்டதெல்லாம் தோல்வியாகவும், ஏமாற்றமாகவும் இருந்தது. எனது மனைவி என்னை ஊக்குவிக்க எவ்வளவோ பாடுபட்டார் என்னால் முடியவில்லை. இறுதியில் தேவாலயத்தில் போயிருந்து பிராத்தனை செய்து பார்த்தேன். ஏதோ ஒரு ஒளி எனக்குள் பாய்ந்தது. என் மனதை உறுத்தியது,

உன்னாலும் சாதிக்க முடியும் என்று சொன்னது. உன்னாலும் மக்களை வசீகரிக்க முடியும் என்று பதில் சொன்னது. அதன் விளைவாக விரைவாக செயற்பட்டேன். அதனால் இந்த நிலமைக்கு வந்திருக்கின்றேன் என்றார்.

மற்றொரு சாதனையாளரை அண்மையில் சந்தித்துக் கலந்துரையாடிய பொழுது உங்கள் சாதனைக்குக் காரணம் என்ன? என்று கேட்ட பொழுது, "நான் ஒரு ஞானி அல்ல, நான் ஒரு மதவாதியும் அல்ல, நான் சாதாரண நம்பிக்கையாளன், எதையும் சாதகமாக சிந்திப்பவன், எல்லாம் நன்றாகவே நடக்கும் என்று சிந்திப்பதால் எனக்கு நடப்பவை எல்லாம் நன்றாக அமைகிறது, என்னால் ஞானிகளைப் போல சிந்திக்க முடிகிறது, என்னுடைய வாக்குப் பலிக்கிறது, என்னால் எதையும் செய்ய முடிகிறது. என்று சொன்னார்.

(வழிகாட்டல்கள் தொடரும்....)

தொகுப்பாசிரியர் : திருமதி. ஜெ. யோகேஸ்வரி.

**From :-**

**SOND**

**IRC- Publication Unit**
**Akkaraipattu – 08**
**Sri Lanka.**

**To :-**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org